# நம்மைக் காவல் காத்து பாதுகாக்கும்படியாக தேவன் தமது தூதர்களை விடுகிறார்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: நியாயப்பிரமாணம் ஒரு நிழலை உடைதாய் இருக்கிறது, ஜூன் 21, 1956

88. இன்றிரவும், அந்தவிதமாகத்தான் அது இருக்கிறது. **நம்மைக் காவல் காத்து பாது காக்கும்படியாக தேவன் தமது தூதர் களை விடுகிறார். "தேவனுடைய தூதர் கள்... சூழப் பாளயமிறங்குகிறார்கள்." அவர்கள் திரும்பிப் போவதும் வருவதுமாக** (back and forth) **இருப்பதில்லை. அவர்கள் இங்கேயே தங்கியிருக்கிறார்கள்.** எனக்கு அது பிடிக்கும். "**தேவனுடைய தூதர்கள் அவ ருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளய மிறங்குகிறார்கள்.**"

காபிரியேல், "ஆனால், கர்த்தாவே, இந்த நேரம் எல்லாம் நீர் எங்கேயிருக்கப் போகிறீர்?" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. ஊ.

"நான் வரவேற்கும் முனையில் (receiving end), மறு முனையில் இருக்கப் போகிறேன்." அது அங்கே போய்ச் சேரும்போது, அதை வரவேற்கும்படியாக அவர் அங்கே இருப்பார்.

89. இன்றிரவு, அவர் அங்கேதான் நின்று கொண்டிருக்கிறார், வரவேற்கும் முனையில். அவர் தம்முடைய பிள்ளைகளை வரவேற்கும்படியாக, மகிமையின் நுழைவாயிலில், வரவேற்கும் முனையில் நின்று கொண்டிருக்கிறார். ஏதோவொரு நாளில், வாழ்க்கை முடியும்போது, அவர் கீழே நீட்டி, அந்தப் பரிசுத்த பெரும்பாதையின் முனையை தமது கரத்தைச் சுற்றிலும் மடித்து, அதை ஒரு பெரிய இழுப்பாக இழுப்பார். அவர் அவ்வாறு செய்யும்போது, அவள் இங்கே உடைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து, அவர் ஒவ்வொரு பரிசுத்தவானையும் மறுபடியுமாக மேலே நித்தியத்தின் மண்டலத்திற்குள் திரும்ப தூக்கிக் கொள்வார், அவள் காலங்களினூடாக உருண்டு போய் விடுவாள். அவர் வரவேற்கும் முனையில் (receiving end) இருக்கிறார்.

90. நீங்கள் எதைக் குறித்து பயப்படுகிறீர்கள்? அவர் அதைச் செய்ய மாட்டாரோ என்று பயப்படுகிறீர்களா? ஆமாம், அவர் அதைச் செய்வார். பரலோகத்தில் ஒரு தேவன் இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர் அதைச் செய்வார். அவர் வரவேற்பளிக்கும் முனையில் இருக்கிறார். ஓ, என்னே. அதை நோக்கிப் பாருங்கள்!

★★★★★

# நான் வேறொரு உலகத்திற்குள் போனேன். அது காணக்கூடாத ஒரு உலகம்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* **விசுவாசம், ஆகஸ்டு 15, 1956**

94. இயேசு, "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்" என்று கூறினார். அப்படி யானால், தேவனால் ஆணையிட்டுக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையானது உண்மையாக இருக்கிறது. அவர் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கை உண்மை யாக இருக்கிறதா? அப்படியானால் நாம் எதைக் குறித்து கவலைப்பட வேண்டும்? **இயேசு இங்கேயிருக்கிறார். அவருடைய ஆவி இங்கேயிருக்கிறது.** நாம் ஒரு... சற்று முன்பு என்ன சம்பவித்தது**? நான் வேறொரு உலகத்திற்குள் போனேன். அது காணக்கூடாத ஒரு உலகம்.** இவ்விதமாக ஒருவர் மற்றவரை காணத்தக்கதாக நாம் மிகவும் உணர்வுள்ளவர்களாக ஆகியிருக்கிறோம். **ஆனால் அங்கே காணக் கூடாத ஒரு உலகமும் இருக்கிறது;** மேலும் நீங்கள்... **நீங்கள் காணக்கூடிய எதைக் காட்டிலும் அது பெரியதாக உள்ளது. இங்கே கிறிஸ்து இருக்கிறார்.**

இந்த உலகத்தில், **இங்கே இந்தக் கட்டிடத்தில், அசுத்த ஆவிகளும் யுத்தமும் உள்ளன.** மேலும் கிறிஸ்தவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார்கள், **விசுவாசத்தைக் கொண்டு அவர்களை ஊக்கமூட்ட முயற் சிக்கும்படியாக, தேவனுடைய தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் பாளயமிறங் கியிருக்கிறார்கள்.**

இதோ நான் என்னைத்தானே விட்டுக்கொடுத்த வண்ணமாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன், பரிசுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருக் கிறார், கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்கள் என்று நீங்கள் எதை அழைக்கிறீர்களோ அது இதுதான். ஆனால், சாத்தான் எப்போதுமே தேவ குமாரர்களை சந்தேகித்து கேள்வி கேட்பவனாக இருக்கிறான் (skeptic) என்பது நினைவிருக்கட்டும். அவன் எப் போதுமே அதைச் செயகிறான் என்பது உங்களுக்குத் தெரியும். சந்தேக எண்ணமுடைய யாரோ ஒருவர், அவர்கள் அதைச் செய்யும்போது, அப்படியே அவன் தலையிட முயற்சிக்கிறான். ஆனால் கிறிஸ்தவர்களோ எப்போதுமே ஜெயங்கொள்கிறார்கள்.

★★★★★

# இப்பொழுது, கர்த்தாவே, ஒருக்கால் அநேக, அநேக தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்கிறோம், ஏனென்றால் விசுவாசிகள் இங்கேயிருக்கிறார்கள்




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அவருக்குச் செவிகொடுங்கள், டிசம்பர் 15, 1956

61. **இப்பொழுது, கர்த்தாவே, ஒருக்கால் அநேக, அநேக தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர் கிறோம், ஏனென்றால் விசுவாசிகள் இங்கேயிருக்கிறார்கள்,** "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள் **(அவர்கள் திரும்புவதும் வருவதுமாய் இருப்ப தில்லை, ஆனால் அவர்கள் பாளய மிறங்குகிறார்கள்)**" என்று வேதாகமம் கூறு கிறது. **தங்கள் கரத்தை உயர்த்தியிருப்பவர் களைச் சுற்றிலும் பாளயமிறங்கும்படியாகவும், அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்ற ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குப் போதிப்ப தற்காகவும் இன்னும் அநேக (தூதர்கள்) இன்றிரவு மகிமையிலிருந்து அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.** பிதாவே, இவர்கள் உம்மோடு கூட ஐக்கியத்தில் இல்லை என்பதை

அடையாளம் கண்டுகொண்டவர்களாக, அவர்கள் உம்மை நோக்கி தங்கள் கரங்களை உயர்த்தியிருக் கிறார்கள். அவர்கள் ஐக்கியத்திற்கு வெளியே இருந்து, இன்றிரவு ஐக்கியத்திற்காக மிகவும் வாஞ்சையாயிருக் கிறார்கள். பிதாவே, கிறிஸ்துவின் நாமத்தில், நீர் ஒவ்வொருவரையும் உமக்கு சொந்தமான அன்புக் குரிய இராஜ்யத்திற்குள் இன்றிரவு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறேன். பரிசுத்த ஆவியான வரின் மூலமாக அவர்களிடம் கெஞ்சுவீராக, பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பி, அழிவில்லாத, நித்திய ஜீவனை அவர்களுக்குக் கொடுத்தருளும்.

அவர்களை வெளியே அழைத்து, ஒரு ஊழி யத்தில் அவர்களை வைத்து, தேவனுடைய மகத்தான திராட்சைத் தோட்டத்தில் விசேஷமான வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தருளும். அது ஒரு சிறிய இல்லத்தரசியாக இருந்தால், அவளை எங்கே வைப் பது என்று நீர் அறிந்திருக்கிறீர். அலுவலகத்திலோ, அல்லது ஆலையிலோ (வேலை செய்யும்) ஒரு மனிதனாக அது இருக்குமானால், அந்த மிகச் சிறந்த வேலையைச் செய்யும்படி அவனை எங்கே வைப்பது என்று உமக்குத் தெரியும். வீதியிலுள்ள மனிதனோ, வெளியே பண்ணையில் (வேலை செய்யும்) ஒரு மனிதனாகவோ இருந்தால், அவனை எங்கே வைப்பது என்று நீர் அறிந்திருக்கிறீர். நீர் சகலத்தையும் அறிந் திருக்கிறீர், ஸ்தானத்தில் பொருத்தும்படி, அவர்களை எங்கே பொருத்துவது என்பதை (நீர் அறிந்திருக்கிறீர்).

தங்கள் கரங்களை உயர்த்தியுள்ள அநேகர் இருக்கிறார்கள், எனவே, பிதாவே, இந்த இரவிலே, பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் மூலமாக, நீர் அவர்களை உம்முடைய இராஜ்யத்திற்குள் பொருத்த வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

★★★★★





